


**09. 10. 2025**

தலைப்பு செய்திகள்

1. சர்வதேச ஸ்திர தன்மைக்கும், பொருளாதார வளர்ச்சிக்கும் இந்தியா பிரிட்டன் இடையிலான நட்பு இன்றியமையா அடித்தளமாக திகழ்வதாக பிரதமர் திரு. நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

2. பொது நலனை அடிப்படையாக கொண்டே நாட்டின் சுகாதார கொள்கை உருவாக்கப்பட்டதாக மத்திய சுகாதார குடும்ப நலத்துறை அமைச்சர் திரு. ஜே.பி.நட்டா கூறியுள்ளார்.

3. தமிழகம் இன்னும் 5 ஆண்டுகளில் ஒருலட்சம் கோடி டாலர் பொருளாதார இலக்கை எட்டும் வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் எடுத்துரைத்தார்.

4. தமிழகத்தில் பெண்களுக்கு எதிரான குற்றங்கள் அதிகரித்து உள்ளதாக பி.ஜே.பி. மாநிலத்தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் குற்றம் சாட்டியுள்ளார்.

5. உலக கோப்பை மகளிர் ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டியில் இந்தியா இன்று தென்னாப்பிரிக்காவை எதிர்கொள்கிறது.

இனி விரிவான செய்திகள்

❖❖❖❖❖❖❖

பிரதமர்

இந்தியாவும் - பிரிட்டனும் ஜனநாயகம், சுதந்திரம், சட்ட நுணுக்கங்கள் அடிப்படையில் இயற்கையான பங்குதார நாடுகள் என்று பிரதமர் திரு. நரேந்திரமோடி பெருமிதம் தெரிவித்துள்ளார்.

பிரிட்டன் பிரதமர் கெய்ர் ஸ்டாமருடன் மும்பையில் இருதரப்பு பேச்சுவார்த்தைகளை மேற்கொண்ட பின்னர், வெளியிட்ட கூட்டறிக்கையில், சர்வதேச ஸ்திர தன்மை பொருளாதார வளர்ச்சி ஆகியவற்றை இலக்காக கொண்டு இருநாடுகளும் அர்ப்பணிப்புடன் செயலாற்றுவதாக எடுத்துரைத்தார்.

இந்தியா - பிரிட்டன் இடையிலான விரிவான பொருளாதார வர்த்தக ஒப்பந்தம் இறக்குமதிக்கான செலவை குறைப்பதோடு, இளையோருக்கு புதிய வேலைவாய்ப்புகளை தோற்றுவிக்கும் என்றார்.

இருநாடுகளுக்கு இடையிலான வர்த்தகம் மேம்பட்டு தொழிற்சாலைகளும், நுகர்வோரும் பயனடைவார்கள் என்றும் கூறினார்.

தொழில்நுட்பம், ராணுவ பாதுகாப்பு, கல்வி, காலநிலை பிரிவுகளில் இருநாடுகளும் ஒத்துழைப்பை மேம்படுத்தி வருவதாக பிரதமர் குறிப்பிட்டார்.

உலகளாவிய ஸ்திர தன்மைக்கு அமைதியும், தூதரக உறவும் இன்றியமையாதது என்று குறிப்பிட்ட பிரதமர், காசா அமைதி ஒப்பந்தத்தை வரவேற்றார்.

இந்தோ பசிபிக், மேற்காசியா, உக்ரைனில், அமைதியும், சட்ட ஒழுங்கும் அவசியம் என்று எடுத்துரைத்த அவர், இருநாடுகளுக்கு இடையிலான கடல்சார் ஒத்துழைப்பையும் சுட்டிக்காட்டினார்.

பிரிட்டனில் வசிக்கும் இந்திய வம்சாவளியினர் இருநாடுகளுக்கிடையிலான நட்புறவின் பாலமாக திகழ்கிறார்கள் என கூறிய பிரதமர், பிரிட்டன் நாட்டின் 9 பல்கலைக்கழகங்கள் தங்களது வளாகங்களை விரைவில் இந்தியாவில் தொடங்க இருப்பதாக மகிழ்ச்சி தெரிவித்தார்.

இதன்மூலம் பரஸ்பர திறன்களும், ஆராய்ச்சிகளும், தொழில் நிபுணத்துவமும் மேம்படும் என்றார்.

பிரிட்டன் பிரதமர் கெய்ர் ஸ்டாமர் பேசுகையில் இருநாடுகளும் இணைந்து எதிர்காலத்திற்கான மேம்பட்ட நட்புறவை இலக்காக கொண்டு செயலாற்றுவதாக எடுத்துரைத்தார்.

2047-ம் ஆண்டு பிரதமரின் வளர்ச்சியடைந்த பாரத தொலைநோக்கு பார்வைக்கு பாராட்டு தெரிவித்த அவர், இப்பாதையில் பிரிட்டனும் பங்களிப்பு நாடாக திகழ விரும்புவதாக குறிப்பிட்டார்.

❖❖❖❖❖❖❖

<u>ராஜ்நாத் சிங்</u>

இந்தியா - ஆஸ்திரேலிய நாடுகளுக்கு இடையிலான இருதரப்பு ஒத்துழைப்பு மேலும் தொடரும் என்று பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு.ராஜ்நாத் சிங் திட்டவட்டமாக தெரிவித்துள்ளார்.

ஆஸ்திரேலிய தலைநகர் கேன்பராவில் அந்நாட்டடு பிரதமர் ஆன்டனி ஆல்பனீஸ் உடனான இருதரப்பு பேச்சுவார்த்தைக்கு பின்னர் தமது சமூக வலைதளப்பதிவில் இதனைத் தெரிவித்தார்.

தொடர்ந்து அந்நாட்டின் துணை பிரதமர், அந்நாட்டு பாதுகாப்பு அமைச்சர் ஆகியோருடன் மேற்கொண்ட பேச்சுவார்த்தையை அடுத்து, பாதுகாப்புத்துறையில் முக்கிய புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் இன்று கையெழுத்தாயின.

எல்லை தாண்டிய தீவிரவாத தடுப்பு, பிராந்திய ஸ்திரதன்மை உள்ளிட்டவற்றில் ஆஸ்திரேலிய வழங்கும் ஒத்துழைப்பிற்கு திரு.ராஜ்நாத் சிங் நன்றி தெரிவித்துக்கொண்டார்.

❖❖❖❖❖❖❖

ஜே.பி.நட்டா

நாட்டின் புதிய சுகாதார கொள்கை 2017-ம் ஆண்டு உருவாக்கப்பட்டதாக மத்திய சுகாதார குடும்ப நலத்துறை அமைச்சர் திரு.**J.P.**நட்டா தெரிவித்தார்.

புதுதில்லியில் இந்திய வர்த்தக தொழில் கூட்டமைப்பின் சுகாதார மாநாட்டில் இன்று உரையாற்றிய அவர், அனைத்து தரப்பினருடனும் விரிவான கலந்தாலோசனைகளுக்கு பின்னரே, பொது நலனை அடிப்படையாக கொண்டு சுகாதார கொள்கை உருவாக்கப்பட்டதாக எடுத்துரைத்தார்.

நம்நாட்டின் சுகாதார சூழல், நோய்த்தடுப்பு, கண்டறிதல், சுகாதார நலமேம்பாடு, சிகிச்சை ஆகிய அனைத்து அம்சங்களையும் உள்ளடக்கியது என்று குறிப்பிட்டார்.

நாட்டிலுள்ள ஒருலட்சத்து 70 ஆயிரம் ஆயுஷ்மான் ஆரோக்கிய நல மையங்கள் மூலம் அனைவருக்கும் ஆரோக்கியம் உறுதி செய்யப்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டினார்.

நாட்டின் மக்கள்தொகையில் 60 கோடி பயனாளிகளுடன் உலகின் மிகப்பொரிய காப்பீடு திட்டமான ஆயுஷ்மான் பாரத் சுகாதார திட்டம் செயல்பட்டு வருவதாக திரு. ஜே.பி.நட்டா எடுத்துரைத்தார்.

❖❖❖❖❖❖❖

மத்திய கல்வியமைச்சகம்

மத்திய கல்வியமைச்சகமும், மத்திய சுகாதார குடும்பநலத்துறை அமைச்சகம் இணைந்து நடத்தும் போதை ஒழிப்பு பிரச்சாரம் புதுதில்லியில் இன்று தொடங்கியது.

போதை பழக்கத்தால் ஏற்படும் விளைவுகள் குறித்த விழிப்புணர்வை இளைய தலைமுறையினரிடையே ஏற்படுத்தும் வகையில் நாடுமுழுவதும் 60 நாட்கள் இப்பிரச்சாரம் மேற்கொள்ளப்படுகிறது

மத்திய சுகாதார குடும்பநலத்துறை இணையமைச்சர் திருமதி. அனுப்பிரியா பட்டேல் தலைமையில் பிரச்சாரம் இன்று தொடங்கப்பட்டது.

❖❖❖❖❖❖❖

## COLDRIF COUGH SYRUP

மத்திய பிரதேசம் ராஜஸ்தான் மாநிலங்களில் பல குழந்தைகளின் மரணத்திற்கு காரணமான இருமல் மருந்தை முறைகேடாக தயாரித்த குற்றச்சாட்டின் பேரில் காஞ்சிபுரம் ஸ்ரேஷன் தனியார் மருந்து உற்பத்தி ஆலையின் உரிமையாளர் ஜி. ரெங்கநாதன் இன்று கைது செய்யப்பட்டார்.

மத்திய பிரதேசத்தில் **Coldrif** இருமல் மருந்தை உட்கொண்டதால் 21 குழந்தைகள் இறந்ததாக கூறப்படும் நிலையில், காஞ்சிபுரம் சுங்குவார் சத்திரத்தில் உள்ள இம்மருந்தாலை ஆய்வு செய்யப்பட்டதை தொடர்ந்து கோடம்பாக்கத்தில் அமைந்துள்ள இம்மருந்து உற்பத்தி மையம் சீல் வைக்கப்பட்டது.

கோல்ட்ரி.ஃப் இருமல் மருந்தில் ஆபத்தான மூலப்பொருட்கள் இருந்ததாக தமிழகம், மத்திய பிரதேச மருந்து தரக்கட்டுப்பாட்டு அலுவலர்கள் கடந்த 4-ம் தேதி அறிக்கை சமர்ப்பித்ததையடுத்து இந்து கைது நடவடிக்கை இன்று மேற்கொள்ளபட்டது.

இதனிடையே செய்தியாளர்களிடம் பேசிய மாநில மருத்துவம் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. மா.சுப்ரமணியன், கோல்ட்ரி.ஃப் இருமல் மருந்தை முறையாக ஆய்வு செய்யாத இரண்டு தர ஆய்வாளர்கள் தற்காலிக பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளதாக குறிப்பிட்டார்.

❖❖❖❖❖❖❖

<u>முதலமைச்சர்</u>

தொழில் வளர்ச்சியில் முதன்மை மாநிலமாக தமிழ்நாடு திகழ்கிறது என முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

கோவையில் இன்று உலக புத்தொழில் மாநாட்டை தொடங்கிவைத்து பேசியஅவர், தொழில் தொடங்குவதற்கான சூழல் மாநிலத்தில் நிலவுவதால் அதிக முதலீடுகள் பெறப்படுவதாக குறிப்பிட்டார்.

புத்தொழில் நிறுவனங்களின் எண்ணிக்கை 6 மடங்கு அதிகரித்துள்ளதாக கூறிய முதலமைச்சர் 2030-ம் ஆண்டிற்குள் ஒருலட்சம் கோடி டாலர் பொருளாதார இலக்கை எட்டும் வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரிவித்தார்.

12 ஆயிரத்திற்கும் மேற்பட்ட புத்தாக தொழில் நிறுவனங்கள் மகளிர் தலைமையில் இயங்குவதை முதலமைச்சர் சுட்டிக்காட்டினார்.

.. வாய்ஸ் ..

இந்நிகழ்ச்சியில் 42 நாடுகளை சேர்ந்த 300 பிரதிநிதிகள், 30 ஆயிரத்திற்கும் மேற்பட்ட தொழில்முனைவோர் கலந்து கொண்டுள்ளனர்.

தொடர்ந்து அவினாசி சாலையில் ஆயிரத்து 791 கோடி ரூபாய் மதிப்பில் 10 கிலோ மீட்டர் தூரத்திற்கு கட்டப்பட்டுள்ள உயர்மட்ட மேம்பாலத்தை முதலமைச்சர் திறந்துவைத்தார்.

இதன்மூலம் 45 நிமிட பயணம் 10 நிமிடங்களாக குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

குறிச்சி சிட்கோ தொழில்பேட்டையில் 126 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தங்கநகை பூங்கா அமைக்கும் பணிகளுக்கு முதலமைச்சர் அடிக்கல் நாட்டினார்.

❖❖❖❖❖❖❖

<u>கே.என். நேரு</u>

தமிழ்நாட்டில் ஒரே பகுதியில் நீண்டகாலமாக வசித்து வரும் குடியிருப்புவாசிகளுக்கான இலவச வீட்டுமனை பட்டாக்கள் தகுதியின் அடிப்படையில் வழங்கப்படும் என மாநில நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் திரு.கே.என். நேரு தெரிவித்துள்ளார்.

திருச்சி மேற்கு சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட பகுதிகளில் குடியிருப்புவாசிகளுக்கு மாநில அமைச்சர் திரு. கோவி.செழியனுடன் இணைந்து பட்டாக்களை வழங்கி பேசியஅவர், மாவட்டத்தில் இதுவரை 2 ஆயிரம் பேருக்கு பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளதாக கூறினார்.

❖❖❖❖❖❖❖

நயினார் நாகேந்திரன்

தமிழகத்தில் பெண்களுக்கு எதிரான குற்றங்கள் அதிகரித்து வருவதாக பிஜேபி மாநில தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் குற்றம் சாட்டியுள்ளார்.

நெல்லையில் இன்று செய்தியாளர்களிடம் பேசியஅவர், 55 சதவிகித வழக்குகள் அதிகமாகி இருப்பதாக குறைகூறினார்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖

மீனவர்கள்

எல்லை தாண்டி மீன்பிடித்ததாக கூறி ராமேஸ்வரத்தை சேர்ந்த 30 மீனவர்களை இலங்கை கடற்படையினர் இன்று கைது செய்துள்ளனர்.

அவர்களது 4 விசை படகுகளும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்ட மீனவர்கள் மன்னார் கடற்படை முகாமிற்கு அழைத்து செல்லப்பட்டுள்ளனர்.

❖❖❖❖❖❖❖

கன்னியாகுமரி வாய்ஸ்

குடியரசு தலைவர் நாட்டு நலப்பணி பிரிவில் திட்ட அலுவலர்கள், தன்னார்வலர்களுக்கு விருதுகளை அண்மையில் வழங்கிய நிலையில், அவரிடமிருந்து விருதுபெற்ற கன்னியாகுமரி மாவட்டம் அகஸ்தீஸ்வரம் விவேகானந்தா கல்லூரி பேராசிரியை திருமதி. ஜெயக்குமாரி இதுகுறித்து தெரிவிக்கையில்

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖

இருவரி

தர்மபுரி மாவட்டத்தில் பெண்களுக்கான மார்பக மற்றும் கர்ப்பபை புற்றுநோய் பரிசோதனை, விழிப்புணர்வு முகாமை ஆட்சித்தலைவர் திரு.சதீஷ் இன்று தொடங்கிவைத்தார்.

புற்றுநோயை ஆரம்ப கட்டத்திலேயே கண்டறிந்து சிகிச்சைபெற வேண்டுமென கேட்டுக்கொண்டார்.

சிவகங்கை மாவட்டத்திலிருந்து வெளிநாடுகளுக்கு வேலைக்கு செல்வோர் அங்குள்ள இந்திய தூதரகம் மற்றும் துணை தூதரங்களில் முறையாக பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று ஆட்சித்தலைவர் திருமதி. பொற்கொடி அறிவுறுத்தியுள்ளார்.

அரியலூர் மாவட்டத்தில் பாரத ஸ்டேட் வங்கி சார்பில் வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கான இலவச பயிற்சி வழங்கப்படவுள்ளதாக ஆட்சித்தலைவர் திரு.ரத்தினசாமி தெரிவித்துள்ளார்.

மயிலாடுதுறை மாவட்டத்தில் தனியார்த்துறை வேலைவாய்ப்பு முகாம் நாளை நடைபெறுகிறது.

திருச்சி, சிவகங்கை, பெரம்பலூர், மதுரை மாவட்டங்களின் அனைத்து ஊராட்சிகளிலும் கிராமசபை கூட்டம் நாளைமறுநாள் நடைபெறுகிறது.

தென்காசி மாவட்டம் அருள்மிகு குற்றாலநாதர் திருக்கோவில் ஐப்பசி விஷு திருவிழா இன்று கொடியேற்றத்துடன் தொடங்கியது.

❖❖❖❖❖❖❖

<u>மகளிர் கிரிக்கெட்</u>

உலக கோப்பை மகளிர் ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டியில் விசாகப்பட்டிணத்தில் இன்று பிற்பகல் 3 மணிக்கு இந்தியா - தென்னாப்பிரிக்காவை எதிர்கொள்கிறது.

❖❖❖❖❖❖❖